நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## CC. No. 329/2016

## P.W. 1 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | பாலமுருக அசோக் |
| தந்தை / கணவர் பெயர் | : | கந்தசாமி |
| கிராமம் | : | மேட்டூர் பொன்நகர் |
| வட்டம் | : | மேட்டூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW1** |
| வயது | : | 48 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம், ஜுன் மாதம், 08–ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர். அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 12.15 PM

1. என்னுடைய முழுபெயர் பாலமுருக அசோக் ஆகும். நான் தெர்மலில் ஒப்பந்த தொழிலாளராக பணிபுரிந்து வருகிறேன். சிவில், மெக்கானிக்கல்,எலக்ட்ரிக்கல் வேலைகளை பொருந்து ஒப்பந்த தொழில் செய்து வருகிறேன். நான் B.A பட்டபடிப்பு முடித்துள்ளேன். நான் அசோக் இன்ஜினியரிங் காண்ட்டிராக்டர்ஸ்

என்ற பெயரில் ஒப்பந்த தொழிலாளராக வேலை செய்து வருகிறேன். அது ஒரு பங்குதாரர் நிறுவனம் ஆகும். அந்த நிறுவனத்தில் நானும், எனது தந்தை கந்தசாமி மற்றும் எனது மனைவி நவனிதம் ஆகியோர் பங்குதாரர்கள் ஆவார்கள்.

2. மேற்படி தொழிலுக்காக GST பதிவுசெய்துள்ளேன். வருமான வரியும் செலுத்தி வருகிறேன். 2015–2016, 2016–2017 ஆகிய வருடங்களுக்கான வருமான வரிக்கணக்கை தாக்கல் செய்துள்ளேன். மேற்படி வரிபதிவுசெய்த விவரங்கள், வருமான வரி கணக்கு விவரங்கள், பங்குரிமை ஆவணம் ஆகியவற்றை இந்த வழக்கில் நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை.

3. என்னுடைய மனுவில் எதிரி எனது நண்பர் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஆஜர் எதிரியை 2006–2007 ஆம் ஆண்டிலிருந்தே எனக்கு தெரியும். 2008–2009 ம் ஆண்டில் நான் தெர்மலில் காண்ட்டிராக்ட் எடுத்திருந்தபோது அந்த பகுதியில் மின்சார வாரிய உதவி பொறியாளராக ஆஜர் எதிரி பணியில் இருந்தார். எதிரியை எனக்கு யாரும் அறிமுகப்படுத்தவில்லை. தொழில் அடிப்படையில் அவர் அதிகாரி என்ற காரணத்தினால் அவரை சந்தித்தேன்.

4. எதிரியின் மனைவியின் பெயர் எனக்கு தெரியாது. அருக்கு ஒரு மகன் மற்றும் ஒரு மகள் உள்ளதாக எனக்கு தெரியும். அவர்களின் பெயர்கள் எனக்கு தெரியாது. அவர்கள் மேட்டுரில்தான் படித்துக்கொண்டிருந்தார்கள். எந்த பள்ளி என்று எனக்கு தெரியாது. அவருக்கு உடன்பிறந்த சகோதரர்கள் எத்தனை பேர் என்று எனக்கு தெரியாது.

5. குடும்ப நண்பர் என்ற முறையில் எதிரியின் வீட்டிற்கு 2–3 முறை சென்றுள்ளேன். எதிரி எனது வீட்டிற்கு வந்ததில்லை. குடும்ப நண்பர் என்ற முறையில் நாங்கள் ஒன்றாக புகைப்படம் எதுவும் எடுத்துக்கொள்ளவில்லை. எதிரிக்கு தம்பி இருப்பது எனக்கு தெரியும். அவரது பெயர் எனக்கு தெரியாது. இந்த வழக்கின் எதிரி எனக்க யாரென்றே தெரியாது என்றாலும் அவர் எனக்கு குடும்ப நண்பர் இல்லை என்றாலும் அதனால்தான் மேற்படி எதிரியின் குடும்ப விவரங்கள் எதுவும் எனக்கு தெரியவில்லை என்றாலும் சரியல்ல. அதிகாரிகள் மூலமாகத்தான் எனக்கு அவரை தெரியும்.

6. மின்சார வாரியத்தில் உதவி பொறியாளராக Additional Divisional Officer ஆக Additional Executive Engineer, Site Supervisor ஆக என்று எதிரி என்ன பதவி வகித்து வந்தார் என்று கேட்டதற்கு மாற்றி மாற்றி சாட்சி பதிலளிக்கிறார். எதிரி இங்கிருந்தபோது எதிரி இருந்த அலுவலக முகவரி Civil Division, MTPS–I ஆகும். 2015 ம் ஆண்டு சமயத்தில் எதிரி சுமார் ரூ.70,000/– சம்பளம் வாங்கிக்கொண்டிருந்தார்.

7. 10.07.2016 ம் ஆண்டு என்னை எதிரி சந்தித்தாக சொல்கிறேன் என்றால் சரிதான். மாலை சுமார் 06.00 மணிக்குமேல் எனது வீட்டிற்கு வந்தார். அவர் தனியாகத்தான் வந்தார். எனது வீட்டில் சுமார் 06.30 மணிக்குள்ளாக இருந்தார். எதிரி தனது தனிப்பட்ட பிரச்சனைகளுக்காகவும், பணப்பிரச்சனைக்காகவும், குடும்ப செலவுகளுக்காகவும் என்னிடம் பணம் கேட்டார். அவர் ஒரு அதிகாரி என்ற அடிப்படையில் அவர் சொல்வது உண்மையா அல்லது பொய்யா என்று நான் விசாரிக்கவில்லை.

8. அவர் வாங்கும் சம்பளத்தின் அடிப்படையில் நான் சொல்லும் ரூ.6 இலட்சம் தொகையை அவர் வங்கியில் அல்லது வேலை செய்யும் இடத்தில் எளிதாக கடன் வாங்கியிருக்கலாம் என்றாலும் என்னிடம் வாங்க வேண்டிய அவசியம் இல்லை என்றாலும் சரியல்ல. எதிரி ஒரு மாதத்தில் பணத்தை திருப்பி தருவதாக சொன்னார். நான் பணம் கொடுத்தபோது நான் பணம் கொடுத்ததற்கு ஆவணங்கள் எதுவும் எழுதி வாங்கவில்லை.

9. பணம் கொடுக்கும்போது காசோலை வாங்கவில்லை. அதன்பின்னிட்டுதான் காசோலையை வாங்கினேன். 10.07.2016 ம் தேதிதான் எதிரிக்கு நான் பணம் கொடுத்தேன். எதிரிக்கு ரொக்கமாகத்தான் பணத்தை கொடுத்தேன். நான் பணம் கொடுக்கும்போது சாட்சியாக யாரையும் வைத்து பணம் கொடுக்கவில்லை. 1000/– ரூபாய் நோட்டுக்களாவும், 500/– ரூபாய் நோட்டுக்களாகவும் எதிரிக்கு பணம் கடனாக கொடுத்தேன்.

10. எதிரிக்கு ரூ.6 இலட்சம் பணம் கொடுத்ததற்காக ஆதாரமாக எந்தவொரு சாட்சியமும், ஆவணமும் என்னிடம் இல்லை. நம்பிக்கையின் அடிப்படையில்

கொடுத்தேன். 10.07.2016 ம் தேதி என்னிடம் ரூ.6 இலட்சம் பணம் இருந்தது என்பதற்கான சாட்சியமும், ஆவணமும் என்னிடம் இல்லை. ஆனால் என் தொழில் தேவைக்காக எப்பொழுதும் பணம் கைவசம் வைத்திருப்பேன். நான் வங்கி மூலமாகவும், ரொக்கமாகவும் பரிவர்த்தனை செய்வேன். நான் பாரத ஸ்டேட் வங்கியிலும், இந்தியன் வங்கி கணக்கிலும் வங்கி கணக்கு வைத்துள்ளேன்.

11. மேற்படி ரூ.6 இலட்சம் தொகையில் ஏதேனும் தொகை வங்கியில் இருந்து எடுத்துக்கொடுத்தேனா என்றால் ஆமாம். சாட்சி உடனே மாற்றி தன்னால் சரியாக சொல்லமுடியாது என்றும் தன் தொழில் தேவைக்காக கையில் வைத்திருந்த பணத்தைதான் ரொக்கமாக கொடுத்ததாக தெரிவிக்கிறார். மேற்படி நான் எதிரிக்கு கடனாக கொடுத்த பணம் என்னுடைய சொந்த பணமாகும்.

12. ஒரு மாதத்தில் திருப்பி கொடுப்பதாக சொன்னதால்தான் நான் பணம் கொடுத்தேன் என்றால் சரிதான். 09.08.2016 ம் தேதி எதிரி வந்து செப்டம்பர் மாத இறுதியில் காசோலையை வசூலுக்கு செலுத்தி பணத்தை பெற்றுக்கொள்ளச் சொல்லி காசோலையை கொடுத்தார். மேற்படி 09.08.2016 ம் தேதி காசோலை எதிரி கொடுத்தார் என்பதற்கும் அதை செப்டம்பர் மாத இறுதியில் வசூலுக்கு செலுத்திக்கொள்ள சொன்னதற்கும் எந்த சாட்சியமும் இல்லை என்றால் சரிதான்.

13. நான் தாக்கல் செய்த வருமான வரி கணக்கில் எதிரிக்கு பணம் கொடுத்ததாக கணக்கு காட்டவில்லை. மேற்படி 10.07.2016 ம் தேதி எதிரிக்கு கடன் கொடுத்தபோது என்னிடம் ரூபாய் ஆறு இலட்சம் பணம் இருந்ததற்கான எந்த ஆதாரமும் என்னிடம் இல்லை. 2016 ம் ஆண்டு நான் காண்டிராக்ட் தொழில் செய்து வந்தேன். என்னுடைய ஆண்டு வருமானம் சுமார் ரூ.25 இலட்சம் இருக்கும்.

14. நான் அந்த வருமானத்திற்கு வருமான வரி செலுத்தி வருகிறேன். கந்தசாமி என்னுடைய தகப்பனார் ஆவார். என் அப்பா கந்தசாமி தங்கம் பைனான்ஸ் என்ற பெயரில் நிதிநிறுவனம் நடத்தி வந்தார் என்றால் சரிதான். அவர் வட்டிக்குதான்

பணம் கடன் கொடுப்பார் என்றால் சரிதான். உரிய உரிமம் பெற்றுதான் நடத்தி வருகிறார் என்றால் ஆமாம். நானும் சிலநேரங்களில் எனது அப்பாவுக்கு மேற்படி நிதிநிறுவன பணிகளில் உதவியாக இருப்பேன் என்றால் சரிதான். மேற்படி எதிரியின் தம்பி பற்றி எனது அப்பாவுக்கு தெரியும்.

15. எதிரியின் தம்பி ஒரு மருத்துவர் என்றால் சரிதான். எனது அப்பாவுக்கும் எதிரியின் தம்பிக்கும் கொடுக்கல் வாங்கல் உள்ள விவரம் எனக்கு தெரியாது. எதிரியின் தம்பி எனக்கு எப்படி தெரியும் என்றால் எதிரி பணம் கொடுக்கவில்லை என்பதால் அதன்பிறகு அவரை பற்றி விசாரிக்கும்போது தெரிந்துக்கொண்டேன். மேற்படி எதிரியின் தம்பி மருத்துவர் சரவணன் எனது அப்பாவிடம் கடன் வாங்கியிருந்தார் என்றாலும் கடன் வாங்கும் சமயத்தில் எனது அப்பாவிடம் எதிரிக்கு தெரியாமல் எதிரியிடம் இருந்து எடுத்த விவரங்கள் நிரப்பபடாத மற்றும் கையொப்பம் போடாத காசோலையை எடுத்து எனது அப்பாவிடம் கொடுத்து கடன் வாங்கியிருந்தார் என்றால் சரியல்ல.

16. காசோலையில் உள்ள விவரங்களை எதிரி வரும்போதே நிரப்பி கொண்டுவந்தார். அதிலுள்ள கையெழுத்தை மட்டும் என் முன்னிலையில் போட்டார். காசோலையில் உள்ள விவரங்களை நான் பூர்த்தி செய்யவில்லை. 17.04.2026 ம் தேதி நான் சாட்சியம் அளிக்கும்போது நான் அளித்த சாட்சிய வாக்குமூலத்தில் என்னை பற்றிய விவரங்களை நான்தான் எனது கைப்பட எழுதியுள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கு காசோலையான **பு.சா.ஆ.1** காசோலையில் உள்ள விவரங்களை நிரப்பிய கையெழுத்தும், மேற்கண்டவாறு சாட்சிய வாக்குமூலத்தில் நான் எழுதிய விவரங்களில் உள்ள கையெழுத்தும் ஒன்றுபோல் உள்ளதென்றாலும் அதிலுள்ள காசோலை கொடுப்பவரின் கையெழுத்துக்கூட என் கையெழுத்துடன் ஒத்துப்போகிறது என்றாலும் மேற்படி காசோலையில் உள்ள விவரங்களையும் அதிலுள்ள கையெழுத்தையும் நான்தான் மோசடியாக போட்டுள்ளேன் என்றாலும் சரியல்ல.

17. நான் எதிரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளேன். அந்த வழக்கறிஞர் அறிவிப்பை எதிரி பெற்றுக்கொண்டதாக எப்படி தெரிந்துக்கொண்டேன் என்றால் ஒப்புகை அட்டையின் மூலம் தெரிந்துக்கொண்டேன். என்னிடம்

காட்டப்படும் **பு.சா.ஆ.5** ஆவணத்திலுள்ள கையெழுத்து எதிரியுடையது ஆகும். அவர் வாங்கி கொண்டதாக எனது வழக்கறிஞர் சொன்னார்.

18. மேற்படி பு.சா.ஆ.5 ஒப்புகை அட்டையில் உள்ள கையெழுத்தும் பு.சா.ஆ.1 காசோலையில் உள்ள கையெழுத்தும் நான் ஒப்பிட்டு பார்த்ததில் வேறு வேறானவை. எனது புகாரிலும், பிரமாண பத்திரத்திலும் என்னுடைய வங்கி விவரங்களை பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எதிரி வழக்கறிஞர் அறிவிப்பை பெறவில்லை என்றாலும் எதிரி பெற்றுக்கொண்டிருந்தால் அதற்கா கட்டாயம் பதிலறிவிப்பு அனுப்பியிருப்பார் என்றாலும் சரியல்ல.

19. எதிரியின் விலாசத்தை அவருடன் வேலை செய்யும் அதிகாரிகள் மூலமாக தெரிந்துக்கொண்டோம். அதன்மூலம் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினோம். ஆவணங்களை பார்க்காமல் எதிரியின் சரியான முகவரியை சொல்லமுடியுமா என்றால் எண்ணூர் அனல் மின்நிலையம் என்று மட்டும்தான் சொல்லமுடியும். எனக்கு எதிரியை தெரியவே தெரியாது என்றாலும் நான் சொன்னவாறு எதிரி என்னுடைய குடும்ப நண்பர் இல்லைஎன்றாலும் சரியல்ல. நான் சொன்னவாறு சொன்ன தேதியில் எதிரிக்கு எந்தவித தொகையும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

20. எதிரியின் தம்பி மருத்துவர் சரவணன் கொடுத்த காசோலையை நான், என்னுடைய அப்பா சேர்ந்து காசோலையில் விவரங்களை பூர்த்தி செய்து எதிரியின் மீது பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. என்னுடைய அப்பா மேற்படி சரவணன் மீதும் அவரது மனைவி மீதும் இதே நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது.

21. எனது அப்பாவுக்கு உதவி செய்யும் நோக்கத்தில் இந்த பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் உண்மையில் பணம் கடனாக கொடுத்திருந்தால் அதற்கான ஆவணத்தை தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் அவ்வாறு இல்லாததால்தான் நான் வாய்மொழியாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. (கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞர் முதலில் சரி என்று சொல்லிவிட்டு

அதன்பின்னிட்டு மாற்றி சொல்வதாக ஆட்சேபனை தெரிவித்தார்.)

22. மேற்படி என் வசம் ரூ.6 இலட்சம் தொகை இருந்தது என்பதற்கு எந்தவித ஆவணங்களையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரிதான். நான் பணம் கொடுத்ததற்கும், அதற்கு எதிரி காசோலை கொடுத்தற்கும் சாட்சியங்கள், ஆவணங்கள் எதுவும் இல்லை என்றாலும் வாய்மொழியாகத்தான் சொல்கிறேன் என்றாலும் நான் நம்பிக்கையின் பேரில்தான் கொடுத்தேன். நான் பணம் கொடுத்ததற்கு எதிரி கொடுத்த காசோலை தவிர வேறு எந்த ஆவணங்களும் என்னிடம் இல்லை.

23. பொதுவாக ரூ.6 இலட்சம் ரொக்கமாக மற்றொரு நபருக்கு கொடுக்ககூடாது என்ற விவரம் எனக்கு தெரியாது. நான் வியாபரம் மற்றும் தொழில் செய்வதன் அடிப்படையிலும் வணிக வரி மற்றும் வருமான வரி செலுத்துவதன் அடிப்படையிலும் மேற்கண்டவாறு ரொக்க பரிவர்த்தனை செய்யக்கூடாது என்ற விவரம் எனக்கு தெரியும் என்றாலும் வழக்கிற்காக தெரியாது என்று மாற்றி சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

24. இந்த வழக்கு காசோலையில் குறிப்பிட்ட தொகை சட்டபூர்வமாக எனக்க வரவேண்டிய தொகை அல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட காசோலை வழக்கிற்காக மோசடியாக தயார் செய்யப்பட்டு இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி மருத்துவர் சரவணன் இறந்துவிட்டதால் அவர் எனது அப்பாவுக்கு கொடுக்க வேண்டிய தொகைக்காக அவருக்கு உதவி செய்யும் பொருட்டு மேற்படி காசோலையை மோசடியாக தயார் செய்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

25. மேற்படி நான் சொன்ன சங்கதிகள் உண்மையாக இல்லாததால்தான் முன்னுக்கு பின் முரணான சங்கதிகளை குறிப்பிட்டு சாட்சி அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:- 01.30 PM

மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்து படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.

ஒம்/—நா.கோபாலகிருஷ்ணன்
நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.